**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.276/2021**

**வா.சா. – 1 –நாகராஜ்**

**நாள். 30.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை அவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை தான் வா.சா.ஆ.3ஆக தாக்கல் செய்துள்ளேன். அதில் 01.09.2021தேதியில் கையொப்பம் செய்து அறிவிப்பை பெற்றுக்கொண்டதாக உள்ளது. நான் அனுப்பிய அறிவிப்பில் அதை பெற்றுக்கொண்ட 1 வாரத்திற்குள் அசல் மற்றும் வட்டியை செலுத்த வேண்டும் என்று கேட்டிருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு கொடுத்தார். எனக்கும் நகல் அனுப்பினார். நான் அந்த பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் அட்டை தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அது பி.வா.சா.1 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி என் வழக்கறிஞருக்கு அனுப்பி அறிவிப்பை 07.09.2021 தேதியில் Intimation கொடுத்தும் அதை அவர் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் என் அறிவிப்பில் குறிப்பிட்ட காலக்கெடுவின் படி 1 வாரம் கழித்து 08.09.2021 தேதி தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் அந்த காலக்கெடுவிற்கு முன்கூட்டியே வழக்கு போட்டு விட்டேன் என்றால் சரிதான். அதனால் அந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள தாவா புரோநோட்டில் (வா.சா.ஆ.1) விவசாய அபிவிருத்திக்காக கடன் பெற்றதாக புரோநோட்டில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 ஐ காண்பித்து தான் வழக்கறிஞர் நோட்டீஸ் தயார் செய்து அனுப்பட்டது என்றால் சரிதான். அந்த நோட்டீசில் வா.சா.ஆ.1 எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் யார் சாட்சி கையொப்பம் போட்டது, யார் எழுதியது என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் தாவா புரோநோட்டு யார் எழுதியது, யார் சாட்சி கையொப்பம் செய்தது என்ற விபரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் தாவா புரோநோட்டு கடனை எந்த இடத்தில் வைத்து, திரும்ப கேட்டேன் என்றால் செட்டியபட்டியில்

வைத்து கேட்டேன். செட்டியபட்டியில் ஒரு டீக்கடையில் வைத்து கேட்டேன். எந்த தேதியில் கேட்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் சடையாண்டியை வைத்து கேட்டேன். சடையாண்டி மூலமாக கேட்ட விபரத்தை நான் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாவா கடனை தவிர யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சந்தனம்மாள் என்பவரை எனக்கு தெரியும். அவர் செட்டியபட்டியில் வசித்து வருகிறார். சந்தனம்மாள் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் பெண் கொடுத்துள்ளேன். சந்தனம்மாள் என்பவரிடம் தான் ராஜம்மாள் கடன் வாங்கியுள்ள விபரம் எனக்கு தெரியாது. சந்தனம்மாள் என்பவரிடம் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு பிரதிவாதி பெற்ற கடனுக்காக ஒரு புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேலும் சந்தனம்மாளுக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தத்தின் பெயரில் சந்தனம்மாள் இந்த பிரதிவாதி மீது திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 194/2021 என்ற வழக்கு போட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. ராஜம்மாளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என் சம்மந்தி சந்தனம்மாளின் தூண்டுதலின் பெயரில் இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 3 மக்கள் உள்ளன. அவர்கள் பெயர் தெரியாது. அவர்கள் சின்னாளபட்டியில் வசித்து வருகிறார்கள். அவர்கள் வீட்டின் நான்கு புறம் யார் வசிக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜமாளுக்கு நன்செய் நிலங்கள் உள்ளன அவை யாருடைய தோட்டத்தின் பக்கத்தில் உள்ளன என்று எனக்கு தெரியாது. ராஜமாள் பெயரில் நன்செய் நிலம் இல்லை என்றும் நான் உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நன்செய் நிலம் இருப்பதாகவும் அதன் சர்வே எண் பற்றி அசல் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ராஜம்மாள் தனது மகளுக்கு 20 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து வைத்து விட்டார் என்றும், மூத்த மகனுக்கு 17 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து வைத்து விட்டார் என்றும், இளைய மகனுக்கு 7 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து வைத்து விட்டார் என்றால் சரிதான். பிரதிவாதியான ராஜம்மாள் அவருடைய இளைய மகனுடன் குடியிருந்து வருகிறார் என்றால் நான் நேரடியாக சென்று பார்க்கவில்லை. பிரதிவாதிக்கு எனது சம்பந்தி கிரையம் ஒப்பந்தம் செய்த சொத்தை தவிர வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனது சம்பந்தி கிரைய ஒப்பந்தம் செய்த காடு நன்செய் காடு என்றால் எனக்கு தெரியாது. கடந்த 5 வருடங்களாக அது விவசாயம் செய்யபடாமல் தரிசாக உள்ளது என்றால் தற்போது கொய்ய மரங்கள் உள்ளன. எனது சம்பந்தி ராஜம்மாள் கிரைய ஒப்பந்தம் செய்த நிலத்தை நான் பார்க்கவில்லை என்றால்

சரிதான். நான் பைனாஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு கையொப்பம் போட மட்டும் தான் தெரியும், எழுதப்படிக்க தெரியாது என்றால் எனக்கு தெரியாது. என் முன்பு கையொப்பம் போட்டார்கள். எனது முன்பாக கையொப்பம் போட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் பிரதிவாதி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. 10.09.2018 தேதியில் பிரதிவாதி எனது இடத்திற்கு வரவில்லை என்றும், கடன் எதுவும் பெறவில்லை என்றும், தாவா புரோநோட்டில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள Written statement ல் உள்ள 1 முதல் 17 பாராக்களில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதானா என்றால் சரியல்ல. எனக்கு வங்கியில் கணக்கு உள்ளது. கடந்த 10.09.2018ம் தேதி என் வங்கி கணக்கில் ரூ.20 லட்சம் இருப்பில் இல்லை என்றால் சரிதான், நான் வீட்டில் இருந்து எடுத்துக்கொண்டு வந்தேன். தாவா கடன் தொகையை நான் வீட்டில் வைத்திருந் து எடுத்துக்கொடுத்ததாக எனது வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதி தனது இளைய மகனின் சவரட்சணையில் வாழ்ந்து வருவதால், அவருக்கு அவசர நிமித்தமாக கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வியாபாரம் செய்து வருவதாக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தென்னந்தோப்புகளை குத்தகைக்கு பிடித்து தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார் என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி யாரிடம் , எந்த தேதியில், எத்தனை வருடம் குத்தகைக்கு எடுத்தார் என்று என்னுடைய பதில் உரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜம்மாள் வியாபாரம் செய்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் புரோநோட்டு எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், நான் ஒப்புக்கொண்டுள்ளார் என்று பொய் சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல. பல நபர்களிடம் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளார் என்று என்னுடைய பதில் உரையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 10.09.2018ம் தேதி பிரதிவாதிக்கு என்னுடைய வீடு எங்கு உள்ளது என்றே தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி தனது இளைய மகனின் பராமரிப்பில் வாழ்ந்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொன்னது போல், எந்த கடனும், எந்த காலத்திலும் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், தாவா புரோநோட்டை பிரதிவாதி எழுதிக்கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எனது சம்பந்தி சந்தனம்மாளின் தூண்டுதலின் பேரில், பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா புரோநோட்டை

மோசடியாக உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்த தாவா புரோநோட்டு வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.01.30 18:58:41 +0530

Additional District Judge,

Dindigul.